ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1787/22 - 2012 දෙසැම්බර් මස 05 වැනි බදාදා - 2012.12.05

*1787/22 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 42.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, மருந்துகளினதும் மற்றும் விற்றமின்களினதும் தயாரிப்பாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் பின்வருவனவற்றை அவர்களால் விற்கப்படும் எல்லா மருந்துகளினதும் மற்றும் விற்றமின்களினதும் பொதியின் மீது அல்லது கொள்கலன் மீது அல்லது அலகுகளின் மீது தெளிவாக அழிக்க முடியாத மையினால் குறிக்கப்படுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

(அ) ஆகக்கூடிய சில்லறை விலை ;
(ஆ) தொகுதியிலக்கம் ;
(இ) உற்பத்தித் திகதி ;
(ஈ) காலாவதித் திகதி ;
(உ) வலு ; மற்றும்
(ஊ) உற்பத்தியாளரினது மற்றும் அல்லது இறக்குமதியாளரினது பெயர், முகவரி விபரங்களை அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறி.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, மருந்துகளும் மற்றும் விற்றமின்களும் சம்பந்தமான பணிப்புரைகளான இல. 2 மற்றும் இல. 4 என்பன முறையே பிரசுரிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் திகதிய 1303/1 ஆம் இலக்க மற்றும் 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆந் திகதிய 1407/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளின் பணிப்புரைகளை இத்தால் நீக்குகின்றது.

இப்பணிப்புரை 2013, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2012, திசெம்பர் 04.

12 - 511/1

பணிப்புரை இல. 43.

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, மருந்துப் பொருட்களின் மற்றும் விற்றமின்களின் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் பின்வருவனவற்றை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என பணிப்புரை விடுகின்றது.

(அ) மருந்துப் பொருட்களினதும் விற்றமின்களினதும் தற்போதைய சில்லறை விற்பனை விலை ;

(ஆ) மருந்துப் பொருட்களினதும் விற்றமின்களினதும் தற்போதைய சில்லறை விற்பனை விலையின் எத்தகைய மீளாய்வினையும் மீளாய்வு செய்யப்பட்ட விலைகளையும் தொகுதியிலக்கம், அத்தகைய மீளாய்வு செய்யப்படுவதற்கு முன்னரான அவற்றின் செயற்பாட்டு திகதியையும் குறிப்பிடுதல் ;

(இ) இப்பணிப்புரையின் திகதியை அடுத்து மருந்துப்பொருட்களினதும் விற்றமின்களினதும் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விடத்து (அ), (ஆ) வின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவேண்டிய தகவல் அத்தகைய மருந்துப் பொருட்கள், விற்றமின்கள் விற்பனைக்குக் கொடுக்கப்படும் முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இப்பணிப்புரை 2013, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2012, திசெம்பர் 04

12-511/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.